| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | மதுரை | காலம் : | 17/12/2022 | முதல் | 21/12/2022 |
| | அறிக்கை எண் : | 100/ 2022 | வெளியீட்டு நாள் : | 16/12/2022 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 29° - 34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.12.2022 முதல் 15.12.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-12-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/12 | 12/12 | 13/12 | 14/12 | 15/12 | தேதி | நாள்-4 17/12 | நாள்-5 18/12 | நாள்-5 19/12 | நாள்-4 20/12 | நாள்-5 21/12 |
| 0.1 | 0.0 | 6.7 | 4.6 | 2.7 | மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 4 | 3 |
| 34 | 33 | 33 | 34 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 30 | 31 | 30 | 29 | 29 |
| 24 | 23 | 23 | 23 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 20 | 21 | 20 | 19 | 19 |
| 7 | 6 | 7 | 5 | 2 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 8 |
| 81 | 87 | 90 | 81 | 87 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 78 | 59 | 74 | 83 | 55 | | 50 | 50 | 50 | 70 | 80 |
| 3 | 0 | 4 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 6 | 6 | 6 |
| வட மேற்கு | 0 | தென் கிழக்கு | தென்மே மேற்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **தென் கிழக்கு** |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 19, 20 மற்றும் 21 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 19°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

.

அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு **(16 - 22 டிச 2022) :**

**மழைப்பொழிவு :**

16-12-2022 -22-12-2022: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சிறிதளவு கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

16-12-2022 -22-12-2022:
மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும் .26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

16-12-2022 -22-12-2022: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : பருத்தி, வெங்காயம், கால்நடை.

பருத்தி:

- தொடர் மழை காரணமாக நீர் தேங்கியுள்ள நிலங்களில் பருத்தி பயிரில் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்த வயலில் நன்கு வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- பாதிக்கபட்ட இடத்தில் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ் + 2 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து ஊற்ற வேண்டும்.

வெங்காயம்:

- தொடர் மழை காரணமாக நிலவும் ஈரப்பதமான சூழ்நிலையால் சின்ன வெங்காயப் (சாம்பார்வெங்காயம்) பயிரில் கோழிக்கால் நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் டிரைக்கோடெர்மா ஹர்சானியம் 200 லி தண்ணீரில் கலந்து ஒவ்வொரு பாத்தியிலும் நேரடியாக குவளை கொண்டு தரை வழியாக கொடுக்கலாம்.

கால்நடை:

- பொதுவாக மழைக்காலம் முடிந்து டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மாட்டுப்பண்ணைகளில் ஹெமட்டோட்டியா ஈ அதிகமாக காணப்படும்.
- இது கடிக்கும் ஈ வகையாகும். இந்த ஈக்கள் மாட்டின் வயிறு, கழுத்து மற்றும் கண் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் கூட்டமாக காணப்படும்.
- ஆண், பெண் ஈக்கள் மாடுகளை தொடர்ந்து கடித்துத் இரத்தத்தை உறிஞ்சக்கூடியதாகும்.
- இந்த ஈக்களை கட்டுப்படுத்த கொட்டகைகளை அவ்வப்போது சுத்தம் செய்து சாணத்தை அகற்றி குப்பை குழிகளில் போட வேண்டும்.
- ஈக்களின் எண்ணிக்கை அதிகமாகும் பட்சத்தில் மாட்டின் மீது வேப்ப எண்ணெய்யை தடவி கட்டுப்படுத்தலாம்.